**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்**: 357 **நாள்**: 05.08.2026

**மாவட்டத் தேர்தல் அலுவலர் அலுவலகம்,**

**சென்னை மாவட்டம், தமிழ்நாடு**

2026ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது சென்னை மாவட்டம், 13. கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பயன்படுத்தப்பட்ட 14 மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்களின் (EVM) Burnt Memory/Microcontroller-ஐ ஆய்வு செய்து சரிபார்க்க (Checking & Verification - C&V) கோரி, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட வேட்பாளரான திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் விண்ணப்பம் செய்திருந்தார்.

அதன்படி, இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களின்படி, சென்னை சிந்தாதிரிப்பேட்டை, அருணாச்சலம் தெருவில் அமைந்துள்ள மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் சரிபார்க்கும் காகிதத் தணிக்கைச் சுவடு (VVPAT) கிடங்கில் உள்ள பாதுகாப்பு அறை (Strong Room) 29.07.2026 அன்று விண்ணப்பதாரர் வேட்பாளரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள், பிற போட்டியிட்ட வேட்பாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, அதே நாளில் Burnt Memory/Microcontroller-ஐ ஆய்வு செய்து சரிபார்க்கும் (Checking & Verification) பணிகள் தொடங்கப்பட்டன.

மேற்படி ஆய்வு மற்றும் சரிபார்ப்பு பணிகளை மேற்கொள்வதற்காக இந்தியத் தேர்தல் ஆணையம், பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL)-லிருந்து ஒரு பொறியாளர் மற்றும் இரண்டு உதவிப் பொறியாளர்களை நியமித்தது. BEL பொறியாளர்கள் விண்ணப்பதாரர் வேட்பாளரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள், பிற போட்டியிட்ட வேட்பாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில், விண்ணப்பதாரரால் தேர்வு செய்யப்பட்ட 14 வாக்குச்சாவடிகளுக்குரிய மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்களில் ஆய்வு மற்றும் சரிபார்ப்பு பணி மேற்கொண்டனர்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களின்படி தேர்வு செய்யப்பட்ட மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஆய்வு மற்றும் சரிபார்ப்பு (Checking & Verification) பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மாதிரி வாக்குப்பதிவு (Mock Poll) நடத்தப்பட்டது. மாதிரி வாக்குப்பதிவின் முடிவுகள் மற்றும் VVPAT சீட்டுகள் சரிபார்க்கப்பட்டதில், எந்தவித முரண்பாடும் இல்லாமல் அனைத்தும் சரியாக இருந்தது உறுதி செய்யப்பட்டது.

சரிபார்ப்பு பணியின் போது, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்பாடுகள் முழுமையாக விளக்கிக் காண்பிக்கப்பட்டன. விண்ணப்பதாரர் வேட்பாளரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் பிற போட்டியிட்ட வேட்பாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் எழுப்பிய அனைத்து சந்தேகங்களுக்கும் உரிய விளக்கங்கள் உடனுக்குடன் அளிக்கப்பட்டன.

ஆய்வு மற்றும் சரிபார்ப்புக்கு உட்படுத்தப்பட்ட அனைத்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும், இந்திய தேர்தல் ஆணையம் வகுத்துள்ள சரிபார்ப்பு நடைமுறைகளின்படி முறையாக செயல்படுகின்றன என்று BEL நிறுவன பொறியாளர்களால் சான்றளிக்கப்பட்டுள்ளது. அச்சான்றிதழின் நகல் விண்ணப்பதாரர் வேட்பாளருக்கு வழங்கப்பட்டது.

சென்னை மாவட்டம், 13. கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குரிய 14 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத் தொகுப்புகளின் Burnt Memory/Microcontroller-ஐ ஆய்வு செய்து சரிபார்க்கும் (Checking & Verification) பணிகள், இந்தியத் தேர்தல் ஆணையம் வகுத்துள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளின்படி 05.08.2026 அன்று நிறைவு பெற்றன.

**மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**
**சென்னை – 600 003.**

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**

Greater Chennai Corporation

Press Release

PR.No.357 Dated: 05.08.2026

## OFFICE OF THE DISTRICT ELECTION OFFICER, CHENNAI DISTRICT, TAMIL NADU

An application was received from the contesting candidate, Thiru M.K. Stalin, seeking the Checking and Verification (C&V) of the Burnt Memory/Microcontroller of 14 Electronic Voting Machines (EVMs) used in the 13.Kolathur Assembly Constituency of Chennai District during the General Elections to the Tamil Nadu Legislative Assembly, 2026.

Accordingly, in compliance with the guidelines of the Election Commission of India, the EVM Strong Room located at the EVM & VVPAT Warehouse, Arunachalam Street, Chintadripet, Chennai, was opened on 29.07.2026 in the presence of the authorised representatives of the applicant candidate, the authorised representatives of the other contesting candidates and the representatives of recognised political parties. Thereafter, the process of Checking and Verification of the burnt memory/microcontroller of the EVMs commenced on the same day.

For carrying out the Checking and Verification process, the Election Commission of India deputed one Engineer and two Assistant Engineers from Bharat Electronics Limited (BEL). The Checking and Verification was carried out by the BEL engineers in the presence of the authorised representatives of the applicant candidate, the authorised representatives of the other contesting candidates. The exercise was undertaken on the EVMs pertaining to the 14 polling stations selected by the applicant candidate.

During the verification process, the diagnostic test of the EVMs were comprehensively demonstrated and clarifications were provided to all the queries raised by the authorised representatives of the applicant's candidate then and there. A mock poll was conducted on all 14 EVM sets and the votes recorded during the mock poll were duly verified. The corresponding VVPAT slips were also counted, establishing that the votes recorded in the EVMs matched exactly with the VVPAT paper slips in front of the authorised representatives of the applicant candidate respectively.

The BEL engineers certified that no modification or tampering was found in the Burnt

Memory /Microcontroller of the EVMs/VVPATs. A copy of the certification was furnished to the applicant candidate.

The Checking and Verification of all 14 sets of EVMs pertaining to the 13. Kolathur Assembly Constituency in Chennai District was completed successfully on 05.08.2026, in accordance with the guidelines and procedures prescribed by the Election Commission of India.

**District Election Officer & Commissioner,**
**Greater Chennai Corporation,**
**Chennai – 600 003.**

**Issued By: Joint Director/Public Relations Officer,**
**Greater Chennai Corporation.**